# தமிழ் மொழி கற்றல் கற்பித்தலில் நவீன முறைகளும் கலைச் செயல்பாடுகளின் பயன்பாடும்

## The Utility of Art and Modern Methods in Learning and Teaching of Tamil

ச. பாபு

S. Babu[1]

முனைவர் இரா. ஆனந்த்அரசு

Dr. R. Anandarasu[2]

**Abstract**

Tamil is an ancient and tradition oriented language. It has many merits unlike other languages of the world. The learning of tamil language has to be comprehensive and complete. The gurukula method has been transformed into learning in constructed buildings. The teaching of tamil still follows conventional and traditional methods. In this the students are deprived of getting the knowledge through modern methods. So the researcher has taken 30 students as samples and asked them about the new techniques that could be adopted in teaching tamil, in particular, through Art. This is called conducting an experimental research in a control group later in a experimental group. Then the results are recorded through a Pre-Test and Post-Test methods. On a statistical study based on the marks from these tests, it is observed that tamil could be taught more effectively through fine arts a transformation in teaching and learning tamil.

**Key Words**: Tamil language, teaching through music, teaching through drawing, teaching through drama, fine arts.

### முன்னுரை

பொதுவாகவே மனிதன் ஒரு புதுமை விரும்பி என்று அழைக்கலாம். ஒவ்வொரு நொடியும் புதிய மாற்றங்கள் உலகில் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இந்நிலையில் தமிழ்மொழி கற்பித்தலில் கலைச்செயல்பாட்டுப் பயிற்சியின் வழியாக செய்யுள் பகுதி, உரைநடை, இலக்கணம், துணைப்பாடம் போன்றவற்றை எளிமையாகவும் மாணவர்கள் மகிழ்ச்சியோடும், கற்றல் ஆர்வத்தை தூண்டும் விதமாகவும் கற்பிக்கலாம்.

அத்தகைய கலைச்செயல்பாட்டுப் பயிற்சிமுறையின் பாடத்திட்ட வடிவமைப்பு, கற்பிக்கும் கால அளவு, மொத்த

[1] The author is a Ph.D research scholar in the Tamil University of Tanjavur, Tamil Nadu, India. babusaga80@gmail.com

[2] The author is an Assistant Professor in the Tamil University of Tanjavur, Tamil Nadu, India. anandarasuyarshini@gmail.com

மாணவர்கள் எண்ணிக்கை, கற்பித்தலுக்குப் பயன்படுத்தும் கலைப் பொருட்கள் எவை? போன்றவற்றை முழுமையாகத் திட்டமிட்டு, கற்பித்தல் செயலுக்கு மொழியாசிரியர் ஒரு பாடத்திட்டத்தை வடிவமைக்க வேண்டும். இவ்வாறான புதிய நவீன முறை கற்பித்தல் பயிற்சி சிறந்த கற்றலை, மாணவர்களுக்கு அளிக்கும் என்பது ஆய்வின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தின் பாரம்பரிய கலைகளான இசைக்கலை, ஓவியக்கலை, நாடகக்கலை, பொம்மலாட்டக்கலைப் பயிற்சியின் வழி தமிழ்மொழி எவ்வாறு கற்பிக்கலாம்? அதன் பயன்கள் யாவை? போன்றவற்றை இந்த ஆய்வு விவரிக்கின்றது.

## சார்பிலக்கியங்கள்

தமிழர்களின் பாரம்பரியக் கலைகள், நுண்கலைகளின் தன்மை, பலவகை நுண்கலைகள் பல்வேறு காலக்கட்டங்களில் வளர்ச்சி பெற்ற நிலைகள், தமிழகத்தில் நுண்கலைகளுக்கு மக்கள் அளிக்கும் முக்கியத்துவம் நுண்கலைகளின் வரலாறு போன்றவை குறித்த பல அறிஞர்கள் நூல் வெளியிட்டுள்ளனர்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் "தமிழகக் கலைகளும் கல்வெட்டுகளும்" என்ற தலைப்பில் எழுதிய நூல் **2009**-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூல் தமிழகக் கலைகளான இசை, ஓவியம், நாடகம். எனப் பல்வேறு நுண்கலைகளைப் பற்றிச் செய்திகளைத் தருகின்றது.

முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி அவர்கள் "தஞ்சை மராட்டிய மன்னர்கள் வளர்த்த நுண்கலைகள்" என்ற தலைப்பில் நூல் ஒன்றை **2006** ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டுள்ளார். இந்நூலில் மராட்டியர் காலத்தில் நுண்கலைகள் எவ்வாறு போற்றி வளர்க்கப்பட்டன என்ற செய்தியை அறிய முடிகின்றது.

மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் எழுதிய "தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்" என்ற நூல் **2002** ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலில் அழகுக் கலைகள் எவை? நுண்கலைகள் வரலாற்றுக் காலம் முதல் இன்று வரை வளர்ச்சியடைந்த நிலை போன்ற பல செய்திகளையும் தருகின்றது.

முனைவர் செ.அ.வீரபாண்டியன் அவர்கள் எழுதிய "தமிழ் இசையில் புதிய கண்டுபிடிப்புகள்" என்ற நூல் **2009**-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலில் தமிழிசையின் தோற்றம். வளர்ச்சி. இறச் சொற்கள், மொழிபெயர்ப்பு, மொழிக்கும் இசைக்கும் உள்ள தொடர்பு போன்ற பல செய்திகளையும் இந்நூல் தருகின்றது.

முனைவர் க.முத்தையா அவர்கள் "தாய் மொழியில் படிக்க வைப்போம்" என்ற தலைப்பில் **2002**-ஆம் ஆண்டு நூல் வெளியிட்டுள்ளார். இந்நூலில் உளவியல் நோக்கில் தாய் மொழிக் கல்வியின் முக்கியத்துவம், தாய்மொழி வழிக் கல்வி சிக்கல்களும் தீர்வுகளும் குறித்த பல செய்திகளையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

டாக்டர் இர. இரேணுபத்மா, வசந்தா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் எழுதிய "கல்வியில் புதுமைகளும் மேலாண்மையும்" என்ற நூலில் கற்பித்தலை எத்தகைய புதிய நோக்கில் மேற்கொள்ளலாம் என்ற செய்திகளை விளக்கியுள்ளார்.

வசீலி சுகம் லீன்ஸ்கி அவர்கள் எழுதிய "இதயம் தருவோம் குழந்தைகளுக்கு" என்ற நூலை மறுவரைவு செய்து "கற் கற்பிக்க மகிழ்ச்சி தரும் பள்ளி" என்ற தலைப்பில், தமிழில் எழுதி, **2007**-ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள, முனைவர் அ.வள்ளி நாயகம். வ.அம்பிகா ஆகியோருடைய இந்நூல் பள்ளிக் குழந்தைகளின் மனநலம், உடல் நல மேம்பாட்டிற்கான புதிய கற்பித்தல் முறைகளை எடுத்தியம்புகின்றது.

முனைவர். ஞா. பழனிவேலு அவர்கள் எழுதிய "செந்தமிழ் கற்பித்தல் பொதுத்தமிழ்" என்ற தலைப்பிலான இந்நூல் **2011**-ஆம் ஆண்டு

வெளியிடப்பட்டது. இந்நூலில், பல்வகை தமிழ் மொழித் திறன் வளர் பயிற்சிகள். தமிழ் மொழி பயிற்றும் முறைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. ஆசிரியர் பயிற்சி மாணவர்களுக்கான இந்நூல் கற்றல் கற்பித்தலில் பல வகைகளையும் கூறுவதாக உள்ளது.

மு. அண்ணா ஜோதி அவர்கள் எழுதிய "பொம்மலாட்டக் கலையும் கலைமாமணி மாணிக்கவாசகமும்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட இந்நூல் 2008-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூல் பொம்மலாட்டக்கலையின் தோற்றம், வளர்ச்சி, தமிழகத்தில் பொம்மலாட்டக்கலையின் வரலாறு போன்ற பல்வேறு செய்திகளையும் தருகின்றது.

சே.இராமனுஜம் அவர்கள் எழுதிய "நாடகக் கட்டுரைகள்" என்ற தலைப்பிலான நூல் 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூல் தமிழ் நாடகக்கலை வரலாறு, நவீனத் தமிழ் நாடகங்கள் பற்றிய பல அரிய செய்திகளையும் தருகின்றது.

இவ்வாறாக நுண்கலைகள் சார்ந்தும், தமிழ்மொழி கற்பித்தலில் புதிய முறைகள் பற்றியும் பல்வேறு கல்வியாளர்களும், அறிஞர்களும் பல நூல்களை எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

### ஆய்வு மேற்கொண்ட முறை.

இந்த ஆய்வானது பரிசோதனை முறை ஆய்வாக மேற்கொள்ளப்பட்டது. இரு உயர்நிலைப்பள்ளிகளில் பயிலும் 9ஆம் வகுப்பு மாணவர்களை ஆய்விற்கு எடுத்துக் கொண்டு ஒரு பள்ளிக்கு 30 மாணவர்கள் வீதம் இரு குழுவாகப் பிரித்துக் கொள்ளப்பட்டது. ஒரு பிரிவு மாணவர்கள் கட்டுப்படுத்தப்பட்ட குழுவாகவும், மற்றொரு பிரிவு மாணவர்கள் பரிசோதனைக் குழுவாகவும், உருவாக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்ட குழு, (Control Group) விற்குப் பொதுவான கற்பித்தல் முறையிலும், பரிசோதனை குழுவிற்குக் (Experimental Group) நுண்கலைச் செயல்பாட்டின் மூலமாக தமிழ்மொழி கற்பிக்கப்பட்டது. இந்த பரிசோதனைக்கு முன்னதாக (Pre Test) முன்தேர்வு இரு குழுவினருக்கும், பின் இரண்டு மாத பயிற்சிகளுக்குப் பின் பின் தேர்வும் (Post Test) வைக்கப்பட்டு, மாணவர்களின் தேர்வுத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட்டுப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த ஆய்வில் பரிசோதனைக்கு மாணவர்கள் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றும் கற்றல் அடைவில் மேலோங்கியும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

### நுண்கலைச்செயல்பாட்டுப் பயிற்சிகள்
### இசைக்கலை

இசையின்பம் இனியது. அரியது. ஓசை பெற்ற ஒழுங்குமுறையை நாம் இசை என்று கொள்கிறோம். பள்ளிப் பாடநூல்களில் பாடல்கள் உள்ளதைப் பார்க்கிறோம். ஆனால் பாடிக்காட்டிப் பயிற்றும்முறை இல்லை. ஓசை நயத்தோடு பாடிக் காட்டினால்தான் உள்ளத்தில் பதிவாகும். தமிழில் பல அரிய இசை நூல்கள் உள்ளன. வரலாற்றுக்காலம் தொடங்கி, தமிழகம் இசைக்கு முக்கியத்துவம் வழங்கிவருகின்றது. மேலும் பல்வகையான இசைக்கருவிகளும் நம் நாட்டில் இருக்கின்றன. தோல்கருவி, துளைக் கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடறு இவற்றில் உண்டாகும் ஓசைகளை ஒழுங்குபடுத்தி இசையை அமைத்தார்கள். இத்தகைய இசைக்கலையைப் பயன்படுத்தி, பள்ளிகளில் தமிழ்ச் செய்யுள்களைக் கற்பிக்கலாம்.

### பயிற்சி 1 செய்யுள் கற்பித்தல் முறை (இசைப்பயிற்சி வழி)

வகுப்பு மாணவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

i. முதல் பிரிவில் 2 அல்லது 3 மாணவர்கள் பாடகர் என்ற நிலையில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ii. இரண்டாவது பிரிவில் 3 மாணவர்கள் சிறிய இசைக் கருவிகள் வாசிக்கக்கூடிய நிலையில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

iii. மூன்றாவது பிரிவாக வகுப்பில் மீதமுள்ள மாணவர்களைப் பார்வையாளர்களாகப் பிரிக்க வேண்டும்.

iv. இந்தப் பயிற்சியில் ஆசிரியர் வழிநடத்துபவராக இருந்து செய்யுளுக்குரிய, ஓசைநயம், பாடும் முறை, இசைக்கருவிகளைக் கையாளும் முறை போன்றவற்றில் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும்.

v. செய்யுளை இனிமையாகவும், இசைநயத்தோடும் பாடும் வகையில் பயிற்சி அளிக்க வேண்டும். இறுதியில் செய்யுளின் பொருள் விளக்கம் தொகுத்துக் கூறுதல் வேண்டும்.

vi. இறுதியாக ஒப்படைப்புப் பணி வழங்க வேண்டும்.

### இசைப்பயிற்சி துணைக்கருவிகள்

சிறிய மணிகள் கோர்க்கப்பட்ட வில், மண்பானை, சிறிய தோல்கருவி.

### ஓவியக்கலை


நாம் கண்ணில் காணும் பொருள்களைச் சித்தரித்து எழுதும் கலையே ஓவியக்கலை ஆகும். வரலாற்றுக் காலத்தில் குகைகளில் வாழ்ந்த மனிதன் பாறைகளில் ஓவியங்களை வரைந்து செய்தியை வெளிக்காட்டினான் சிலப்பதிகாரத்தில்

"ஓவியச் செந்நூல் உரைநூற் கிடக்கையும்
கற்றுத் துறைபோகிய பொற்கொடி நங்கை."

என்ற அடிகளில் சங்க காலத்தில் ஓவியக்கலை பற்றிய சிறந்த நூல் ஒன்று இருந்துள்ளது எனவும், மாதவியின் நடன அரங்கேற்றம் நிகழ்ந்த அரங்கின் மேற்கூரையில் பல்வகை வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்த செய்தி அறிய முடிகின்றது. தமிழகத்தின் சித்தன்னவாசல் ஓவியங்கள் உலகப்புகழ் பெற்றவையாக விளங்குகின்றது. இத்தகைய ஓவியக்கலையைப் பயன்படுத்தி, தமிழ் உரைநடை கற்பிப்பதால், மாணவர்களின் மனம் மகிழ்ச்சியடைகின்றது. கைகளுக்குச் சிறந்த தசைப் பயிற்சியாகவும் அமைவதோடு மாணவர்களிடையே படைப்பாற்றல் மேம்படும். மொழி கற்றல் எளிமையாகும்.

### பயிற்சி 2 உரைநடை கற்பித்தல் முறை (ஓவியப்பயிற்சி வழி)

வகுப்பு மாணவர்களைப் போதுமான இடைவெளி விட்டு வரைபடம் வரைய



| | | | |
|---|---|---|---|
|  |  |  |  |

2. பாட மையக்கருத்து

| | | | |
|---|---|---|---|
| | | | |

3. பாட விளக்கம்

| | | | |
|---|---|---|---|
| | | | |

4. முடிவுரை

| | | | |
|---|---|---|---|
| | | | |

உகந்த சூழ்நிலையில் அமரச்செய்ய வேண்டும்.

i. தமிழ்ப் பாடநூலில் அன்று கற்பிக்க வேண்டிய உரைநடை பாடத்தினைத் துணைத் தலைப்புகளுக்கு ஏற்றவாறு 5 பகுதிகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும்.

ii. ஒவ்வொர் பகுதிக்கும் 4 கட்டங்கள் வீதம் இடமிருந்து வலமாக கட்டங்கள் வரைய வேண்டும்.

iii. உரைநடையின் அளவுக்கேற்ப கட்டங்களின் எண்ணிக்கையைக் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம்.

iv. இரண்டாவது வரிசையில் உள்ள கட்டங்களில் உரைநடையின் மையக்கருத்தை விளக்கும் படங்களை வரையவும்.

v. மூன்றாவது வரிசையில் உள்ள கட்டங்களில் உரைநடையின் திரண்ட தொகுப்பை விளக்கும் வகையில் படங்கள் வரையவும்.

vii. நான்காவது வரிசையில் உள்ள கட்டங்களில் உரைநடையின் முடிவுரை தொடர்பான படங்களை வரையவும்.

viii. கலைப்பயிற்சி வழி தமிழ் மொழி கற்பித்தால் மாணவர்களின் உடல் மற்றும் மனச்செயல்பாடுகள் மேலோங்கியும், படைப்பாற்றல், உருவாக்கச் சிந்தனை வளரும், மொழியோடு கலையார்வம் அதிகரிக்கும்.

xi. மொழி கற்றல் அடைவும். பள்ளி தேர்ச்சி விழுக்காடும் அதிகரிக்கும்.

x. இறுதியாக ஒப்படைப்புப் பணி வழங்க வேண்டும்.

xi. இந்தமுறையில் ஓவியங்கள் வழி பாடக்கருத்துக்கள் காட்சியப்படுத்தப்படுவதால், மாணவர்கள் காட்சி வழி மனப்பதிவுகளை உள்வாங்கிக் கொள்கின்றனர்.

## ஓவியப்பயிற்சி வரையக் கருவிகள்

**(குறிப்பு: பாடத்தலைப்பிற்கு ஏற்ற ஓவியங்களை 2,3,4 வரிசையில் உள்ள கட்டங்களில் வரைதல் வேண்டும்)**

வரைபடத்தாள், பென்சில், அழிப்பான், அளவுகோல், வண்ணப் பென்சில்கள்.

**1. பாட அறிமுகம்**

### நாடக்கலை

கூத்து என்ற சொல்லே முதலில் நடனத்தையும் பின் நாடகத்தையும் குறித்தது. நடனத்தையும் நாடகத்தையும்

கூத்தர் என்பவர் பேணி வளர்த்தனர். இருபதாம் நூற்றாண்டில் பம்மல் சம்பந்த முதலியார், சங்கரதாசு சுவாமிகள் போன்றோர்கள் நாடகக்கலையை வளர்த்தனர். மனிதனது துன்பம், இன்பம், வாழ்க்கை முறை போன்றவற்றைப் பொது அரங்கில் உரையாடல்கள், பாடல்கள் வழி நடித்துக்காட்டுவது நாடகமாகும். தமிழகத்தின் நாடகக்கலை முதலில் தெருக்கூத்து, பின் மேடை நாடகம் என்ற நிலைகளில் வளர்ச்சியடைந்தது எனலாம். இத்தகைய நாடகக்கலையைப் பயன்படுத்தி தமிழ் இலக்கணம் கற்பித்தலைப் பள்ளிகளில் மேற்கொள்ளலாம். இம்முறையில் மாணவர்கள் கற்பதால் இலக்கண வகுப்புகளில் மாணவர்கள் ஆர்வத்தோடும், எளிமையாகவும் இலக்கணம் கற்றுத் தெளிவர். கற்றல் அடைவு அதிகரிக்கும்.

### பயிற்சி 3 இலக்கணம் கற்பித்தல் (நாடகப்பயிற்சி வழி)

இந்தவகை நாடகமுறை இலக்கணம் கற்பித்தல் பயிற்ச்சிக்கு மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

i. முதல் குழுவில் இரண்டு ஆசிரியர்களாக மாணவர்களை உருவாக்க வேண்டும். (மாதிரிகளாக)


ii. இரண்டாவது குழுவில் மாணவர்கள் நால்வரை மாணவர்களாகவே இருக்கச் செய்ய வேண்டும்.

iii. மூன்றாவது குழுவில் ஊர் பொதுமக்களாக இருவர் அல்லது மூவரை உருவாக்க வேண்டும்.

vi. இந்த மூன்று குழுக்களிடமும் இந்த நாடகமுறைக் கற்றல் கற்பித்தல் பயிற்சியைச் செயல்படுத்த மொழியாசிரியர் பயிற்சியளிக்க வேண்டும்.

v. கதாபாத்திரங்களின் நிலையை விளக்கி, அன்று கற்பிக்க வேண்டிய இலக்கணப்பகுதி சார்ந்த விளக்கங்களை வினா வடிவில் ஒவ்வொரு கதாபாத்திரமும் ஒருவர் வினா - விடை கேட்க. மற்றவர் விடையளிக்கும் வகையில் உரையாடல் தயாரிக்க வேண்டும்.

vi. ஆசிரியர் - மாணவர் கதாபாத்திரங்களை விளக்கி வசன உச்சரிப்பு, முகபாவம், குரல் ஏற்றத்தாழ்வு, மேடை நாகரீகம், தெளிவான உச்சரிப்பு போன்றவைகளைச் சரியாகச் செய்யப் பயிற்சியளிக்க வேண்டும்.



vii. இந்த நாடகமுறைப் பயிற்சியினால் இலக்கண வகுப்பு இனிமையாகவும் நகைச்சுவையோடும் நடைபெறும். மாணவர்களும் ஆர்வமோடு பங்கேற்று கற்றலில் மேம்படுவர்.

viii. கரும்பலகையில் எழுதுதல், பிற மாணவர்களோடு நாடகத்தில் இணைந்து ஒற்றுமையோடு பழகுதல், மற்றும் மனமகிழ்ச்சி போன்றவை மேலோங்கும்.

ix. ஆசிரியர் - மாணவர் உறவு மேம்படும்.

x. இலக்கணம் சார்ந்த அறிவு மேம்பட்டு, தேர்ச்சி விழுக்காடு அதிகரிக்கும்.

xi. இறுதியாக ஒப்படைப்புப்பணி அளிக்க வேண்டும்.

### நாடகப்பயிற்சி துணைக் கருவிகள்

கதாபாத்திரங்களுக்கு ஏற்ற ஆடைகள், முகச்சாயம், கருப்பு மை, வண்ணத் திரைச்சீலை, மேசை, நாற்காலி...

### பொம்மலாட்டக் கலை

பொம்மலாட்டம் என்பது பொம்மைகளைக் கொண்டு கதாபாத்திரங்களாக வடிவமைத்து, அந்த பொம்மைகளை இயக்கி நடத்தப்படும் கலையாகும். இக்கலையைப் பாவைக் கூத்து எனவும், மரப்பாவைக் கூத்து எனவும் கூறுவர். பொம்மலாட்டக்கலையைப் பயன்படுத்தி பள்ளிகளில் துணைப்பாடம் கற்பிக்கலாம். துணைப்பாடச் சிறுகதைகளுக்குரிய கதாபாத்திரங்களைச் சிறு அட்டை பொம்மைகளாக உருவாக்கி, அவற்றை இயக்கி, தமிழ்த் துணைப்பாடம் கற்பிக்கலாம். இந்த முறையில் கற்பிப்பதால் மாணவர்கள் பாடப்பொருளையும், சிறுகதைகளின் மையக்கருத்தையும் காட்சி வழி அறிந்துகொள்கின்றனர். இதனால் கற்றல் மேம்படும்.

### பயிற்சி 4 துணைப்பாடம் கற்பித்தல் (பொம்மலாட்டப் பயிற்சி வழி)

துணைப்பாடம் கற்பித்தலில் சிறுகதைள், வாழ்க்கை வரலாறுகள், சமூக நாடங்கள் போன்றவை பாடங்களாக சேர்க்கப்பட்டிருக்கும். இத்தகைய பாடங்களைக் கற்பிக்க, பொம்மைகளைப் பயன்படுத்தி, கற்றலை இனிமையாக்கலாம்.

i. மாணவர்களை வகுப்பில் போதுமான இடைவெளி விட்டு அமரச்செய்ய வேண்டும்.

ii. மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரிக்க வேண்டும்.

iii. ஒரு சிறு கதையை ஆசிரியர் தேர்ந்தெடுத்து, அதில் உள்ள கதாபாத்திரங்கள், விலங்குகள், பொருட்கள், வீடுகள், வாகனங்கள் மற்ற உருவங்கள் போன்றவற்றைக் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும்.

iv. முதல்குழு மாணவர்களிடம் அந்த சிறுகதையின் கதாபாத்திரம் மற்றும் தேர்ந்தெடுத்த உருவங்களை மொத்தமாகத் தாளில் வரைந்து, அந்த உருவங்களுக்கு வண்ணம் தீட்டி, அவற்றை வெட்டி எடுக்க வேண்டும்.

v. இரண்டாம் குழு மாணவர்கள் அந்த வெட்டி எடுக்கப்பட்ட வரைபட உருவங்களுக்குக் குச்சி, நூல், கம்பி போன்றவற்றைப் பயன்படுத்தி, அசையும் பொம்மைகளாக உருவாக்க வேண்டும்.

vi. மூன்றாவது குழு பொம்மைகளை இயக்கும் குழு, இதில் குறிப்பிட்ட சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, பொம்மைகளை இயக்கச்செய்து நிகழ்ச்சி நடத்தப்பட வேண்டும்.

vii. மூன்றாவது குழு மாணவர்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து பொம்மைகளின் கதாபாத்திரங்களுக்குரிய வசனங்களைப் பேசச் செய்து பயிற்சி அளிக்க வேண்டும். இவர்கள் பொம்மைகள் இயக்கப்படும் போது வசனங்களை வெளிப்படுத்த வேண்டும்.

viii. பொம்மலாட்ட அரங்கம் தயாரிக்க, மூன்று உயரமான மேசைகளை ப வடிவில்

அமைக்க வேண்டும். பின்னர் மேசைகளின் பின்னணியில் வெள்ளைத் திரைச்சீலை சுவற்றில் கட்டப்பட வேண்டும். ப வடிவில் அமைக்கப்பட்ட மேசைகளை அடர்நிற துணிகளால் மூடி மறைக்கப்பட வேண்டும்.

xi. ப வடிவில் அமைக்கப்பட்ட மேசைகளின் பின்னணியில் அமர்ந்தவாறு மாணவர்கள் (மூன்றாம் குழு) பொம்மைகளை இயக்க வேண்டும்.

x. பொம்மைகளின் அளவுக்கு ஏற்ப, வசனங்கள் பேசப்பட வேண்டும். இந்த முறை கற்பித்தலில் பாடத்தின் (அல்லது) கதையின் கருப்பொருளை மாணவர்கள் காட்சிவழி கற்றுத் தெளிகின்றனர்.

xi. கற்பித்தலில் மாணவர்களும் பங்கு பெறுவதால், கற்றல் கற்பித்தல் எளிமையாகவும், அனுபவரீதியாகவும் இனிமையாகவும் இருக்கும்.

xii. இறுதியாக, ஒப்படைப்பு பணி வழங்கப்பட வேண்டும்.


## ஆய்வின் கண்டுபிடிப்புகளும், பரிந்துரைகளும்

பரிசோதனை முறையில் மேற்கொண்ட இந்த ஆய்வானது உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் தமிழ்மொழி கற்றலில் மேம்படுத்தல் தொடர்பானது. நுண்கலைச் செயல்பாடுகளின் வழியாக இசை, ஓவியம், நாடகம், பொம்மலாட்டம் போன்றவற்றைப் பயன்படுத்தி, தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் செயலில் ஈடுபடுவதால், மாணவர்கள் பெறும் பயன், கற்றலில் உயர்நிலை அடைவு பெறுதல் போன்றவற்றை இவ்வாய்வின் முடிவு வெளிப்படுத்துகின்றது.

❖ பொதுவான கற்பித்தல் முறையை விட, நுண்கலைச் செயல்பாடுகள் வழி கற்பதையே மாணவர்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

❖ கட்டுப்படுத்தப்பட்ட குழு மாணவர்களின் கல்வி அடைவைவிட பரிசோதனைக்குழு மாணவர்களின் கல்வி அடைவு உயர்வாக உள்ளது.

❖ நுண்கலைச் செயல்பாடுகளின் வழி தமிழ்மொழி கற்பதால் மாணவர்களுக்குச் சலிப்பு ஏற்படுவதில்லை.



❖ நுண்கலைப் பயிற்சிவழி மொழி கற்ற மாணவர்கள் சமூக முதிர்ச்சி பெற்றவர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

❖ இசைப்பயிற்சி வழி செய்யுள் கற்பதால், பொதுவான இசையறிவும் இசைக்கருவிகளை இயக்கும் பழக்கமும் ஏற்படுகின்றது.

❖ சிறந்த குரல்வளமும், செய்யுள் பாடும் திறனும் பெறுகின்றனர்.

❖ எளிய முறையில் கடினமான தமிழ்ச் சொற்களையும், இசையோடு பாடும்போது உச்சரிக்கப் பழகி விடுகின்றனர்.

❖ இலக்கண வகுப்பை நாடகமுறையில் கற்பதால், மாணவர்கள் எளிய உரையாடல்கள் வழி கற்கின்றனர்.

❖ அன்றாட வாழ்வில் பயன்படுத்தும் எளிய தமிழ்ச்சொற்களின் இலக்கண விளக்கங்களை அறிகின்றனர்.

❖ மாணவர்களிடம் நாடக முறை கற்றலால் சகோதரத்துவம், குழு மனப்பான்மை பெருகும்.

❖ ஓவியப்பயிற்சி முறையில் உரைநடை கற்பதால் மாணவர்களின் படைப்பாற்றலும், கற்பனைத்திறனும் மேலோங்கும்.

❖ மாணவர்களின் கைகளுக்குச் சிறந்த தசைப்பயிற்சியாக அமையும்.

❖ அதிக பக்கங்கள் கொண்ட பாடத்தின் திரண்ட கருத்துக்களை சில கட்டங்களின் படங்கள் மூலம் எளிதில் அறிகின்றனர்.

❖ பொம்மலாட்டக் கலைப் பயிற்சி வழி துணைப்பாடம். சிறுகதைகளைக் கற்பதால், மாணவரிடையே காட்சி வழி கற்கும் பண்பு மேம்படுகின்றது.

❖ பொம்மலாட்டக் கலை பயிற்சி வழி சிறுகதைகளைக் கற்பதால், கதையின் கதாபாத்திரங்கள், மையப்பொருள் போன்றவற்றை நிலையாக மனதில் பதிய வைக்கின்றனர்.

❖ பொம்மலாட்டக்கலை பயிற்சி வழி கற்பதால் நாட்டுப்புறக் கலைகளின் பெருமைகளை அறிகின்றனர்.

❖ இத்தகைய நுண்கலைப் பயிற்சி வழி தமிழ்மொழி கற்பதால், மாணவர்களின் தேர்ச்சி அதிகரிக்கின்றது. வருகை விழுக்காடு அதிகரிக்கின்றது. நற்பண்புகளைப் பெறுகின்றனர். சிறந்த கற்றல் அடைவு பெறுகின்றனர்.

## பரிந்துரைகள்

i. பள்ளிகளில் நுண்கலைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

ii. ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு கலைக்காட்சியகம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

iii. மாணவர்கள் ஏதேனும் ஒரு நுண்கலையை விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுக்கும்படியான கல்வித்திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

iv. கலைத்திட்டங்களில் நுண்கலை குறித்த பாடல்கள் அதிக அளவில் இடம்பெற வேண்டும்.

v. மாணவர்களின் கலையார்வத்தை ஊக்கப்படுத்த சிறந்த கலையார்வம் மிக்க மாணவர்களுக்குச் சிறப்பு பயிற்சியளிக்க வேண்டும்.

vi. தமிழாசிரியர்களுக்கு நுண்கலை சார்ந்த பணியிடைப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

vii. பல்கலைக் கழகங்கள் நுண்கலைகள் கல்வி செயல் மேம்பாட்டிற்குப் பயன்படும் விதம் பற்றிய ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்த வேண்டும்.

vii. பாரம்பரிய நுண்கலைகளைப் பற்றிய உலகலாவிய விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும்.

## முடிவுரை

இத்தகைய பல்வேறு கலைப் பயிற்சிகள் வாயிலாக, தமிழ்மொழியை நவீன முறையில் கற்பிப்பதால், மாணவர்களின் தமிழார்வம் மேம்படும். இலக்கணங்களை

எளிமையாகவும் மகிழ்ச்சியாகவும் கற்பர். மொழியறிவோடு படைப்பாற்றலையும் பெற்ற கற்றல் அடைவில் உயர்நிலை அடைவர். எனவே, மொழியாசிரியர்கள் கல்வியோடு கலைகளையும் இணைத்துக் கற்பித்தால் கற்றல் - கற்பித்தல் சிறப்படையும். மேலைநாட்டு கல்வியாளர்கள் கலைப்பயிற்சி வழி கற்பித்தலையே பெரிதும் வலியுறுத்தினர். குறிப்பிட்ட சில நாடுகளில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு இசை, ஓவியம், நடனம் போன்ற ஏதேனும் ஒரு கலையைக் கட்டாயமாகக் கற்க வேண்டும் என்ற ஒரு சிறந்த முறை செயல்படுத்தப்படுவது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். எனவே கற்றல் செயலில் மாணவர்களின் உடல் மற்றும் மனம் இரண்டின் செயல்பாடும் ஒன்றிணைந்து செயலாற்றும்படியான கற்றல் கற்பித்தலே சிறந்த கல்விமுறையாகும்.

## References


Anna Jothi, Mu. (2008). *Pommaladda Kalaiyum Kalaimamani Manikkavasagamum*. Chennai: Aruna Vijay Nilayam.

Arivudainambi. Ma., Sa. (2006). *Tanjai Marattiya Mannargal Valarta Nunkalaigal*.Pondychery: Karumani Publications.

Babu, Sa. (2014). *Tanjai Mavadda Ilangkalviyiyal Payitci Asiriyargalin Nunkalaithirangal Kuritha Aivu*. Tanjavur: Unuversity of Tamil.

Muthaiya, K. (2000). *Thaimozhiyil Padikka Vaipoom*. Chennai: New Century Book House.

Nagarajan, K. (2009). *Kalvi Araichi Nerimuraigal*. Chennai: Ram Publications.

Palanivelu, Nya. (2011). *Senthamil Karpittal Pothuthamil*. Tanjavur: Nathi Publications.

Ramanujam, Se. (2003). *Nadaga Katturaigal*. Chennai: Kavya Publications.

Rasamanikanar, Ma. (2009). *Tamilaga Kalaigalum Kalveddugalum*. Chennai: Poombugar Publications.

Rasamanikanar, Ma. (2011). *Tamilaga Kalayum Panbadum*. Chennai: Saratha Publications.

Vasali Sugam Leanks. (2007). *Karka Karpikka Magilchi Tarum Palli*. Chennai: Barathi Puthakalayam.

www.wikipedia - Tamilar Kalaigal